REGD.No. M. 6311 தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க.தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The official organ of the D.P.F.

திரு-கொச்சி ஆற்றுத் தண்ணீர்

சென்னைக்குத் திருப்பும் எண்ணமில்லையாம்!

திரு—கொச்சி ஆற்றுத்தண்ணீரை சென்னை மாநிலத்திற்குத் திருப்பும் உத்தேசம் சர்க்காருக்கு இல்லையென மாநில மராமத்து மந்திரி வேலாயுதன், சட்டசபையில் கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையில் தெரிவித்திருக்கிறார்.

இது குறித்து மத்திய சர்க்காரிடமிருந்து யோசனை எதும் கிடைக்கவில்லையென்றும், சென்னை சர்க்காருடன் ஒப்பந்தம் எதுவும் செய்துகொள்ளவும் இல்லையென்றும் அவர் விளக்கினாராம்.

மலர் 3] சென்னை: புரட்டாசி 21உ வெள்ளி (7—10—55) ★ ★ வெளியூர்: புரட்டாசி 22உ சனி (8—10—55) [இதழ் 99

வடவரின் வஞ்சனைக்கு மைசூர் மாநிலமும் பலி

ரூ. 250 கோடி திட்டம்

ரூ. 80 கோடியாக சுருக்கப்பட்டது

முதன் மந்திரியின் தீவிர முயற்சி தோல்வி

புதுடில்லி, அக். 6—

தென்னாட்டு மாநிலங்கள், ஐந்தாண்டுத் திட்டங்களில் வடவரால் அநீதிக்கு ஆளாக்கப்படும் நிலை தொடருகிறது என்பதற்கு மைசூர் மாநிலத் திட்டங்கள் பாதிக்கு மேலாக வெட்டப்பட்டிருப்பது பற்றிய செய்தி மற்றுமொரு ஆதாரமாகிறது.

சுமார் 251.72 கோடி ரூபாய் பெறுமான திட்டங்களை, அங்கீகாரத்திற்காக, மைசூர் முதலமைச்சர் அனுமந்தையா டில்லிக்குத் தூக்கிச் சென்றார்.

ஆனால், திட்டக் குழுவினரோ, மைசூருக்கு ரூ. 80 கோடிக்கு மேல் ஒதுக்க முடியாதெனத் திட்டமாகத் தெரிவித்து, திட்டங்களைப் பாதிக்கு மேலாக வெட்டி விட்டிருக்கின்றனர்.

திட்டக் குழுவினருடன் பேச்சுவார்த்தை நடத்தி, பாதிக்கு மேல் பெற முடியாத வருத்தத்தோடு, முதன் மந்திரி அனுமந்தையா, 'தரப்பட்டுள்ள ரூ. 80 கோடி போதுமானதல்ல—அபிவிருத்தியில் வேகமான முன்னேற்றம் ஏற்பட இன்னும் அதிகமான தொகை வேண்டும்,'— என்று வலியுறுத்தியும் அதிகம் பெற முடியவில்லை என்றும் கூறப்படுகிறது.

ரூ. 251.72 கோடி மதிப்புடைய மைசூர் திட்டம் ரூ. 80 கோடி அளவுக்குச் சுருக்கப்பட்டிருக்கிறது—அதாவது, மூன்றில் இரண்டு பங்கு திட்டங்கள் அங்கீகரிக்கப்படவில்லை; 'இது, இதர தென்னாட்டு மாநிலங்களுக்குத் தரப்பட்ட அளவு விகிதத்திலும் மிக மிகக் குறைவான தாகும்,' என்றும் கூறப்பட்டிருக்கிறது.

நம்பிக்கையில்லாத் தீர்மானம்

மீண்டும் திரு-கொச்சி மந்திரி சபை மீது வருகிறது

திருவனந்தபுரம், அக். 6—

பனம்பள்ளி கோவிந்தமேனன் தலைமையில் உள்ள காங்கிரஸ் மந்திரி சபை மீது புரட்சி சோஷலிஸ்டுகள் கொண்டுவந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானம், நேற்று, தலைவரால் நிராகரிக்கப்பட்ட சில மணி நேரத்திற்கெல்லாம், மீண்டும் புரட்சி சோஷலிஸ்டு உறுப்பினர்கள் இருவர் புதியதாக வேறொரு நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தைத் தாக்கல் செய்திருக்கின்றனர்.

அர்ஜெண்டைன விஞ்ஞானி கைது

மலிவான அணுசக்தி உற்பத்தி செய்வதாகக் கூறி— கோடிக்கணக்கான பணம் பாழடித்தாராம்!

பியூனஸ் அயர்ஸ், அக். 5—

அர்ஜெண்டைனாவின் அணு சக்தித் தொழிற்சாலையின் பொறுப்பில் இருந்த பேராசிரியர் ரோனல்டு ரிச்சர் என்ற விஞ்ஞானியை சர்க்கார் கைது செய்திருக்கின்றனர் என்று தெரிகிறது.

56 வயதான பேராசிரியர் ரிச்சர், நான்கு ஆண்டுகளுக்கு முன்பாக, தன்னால் மலிவான அணுசக்தி உண்டுபண்ண முடியும் என்று கூறி, அர்ஜெண்டைனாவில் ஒரு பெரும் பரபரப்பை உண்டுபண்ணினார்.

கடந்த ஆண்டு அவரது உறுதி மொழிகள் நிறைவேறவில்லை என்பதால், அவர் மீது, பலனளிக்காத ஒரு திட்டத்திற்காக கோடிக்கணக்கான பணம் அவரால் பாழடிக்கப்பட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டது.

அங்கிருந்தும் துரத்த வேண்டுமாம்!

பியூனஸ் அயர்ஸ், அக். 6—

முன்னாள் குடியரசுத் தலைவர் பெரானை, பாராகுவேயிலிருந்து துரத்திவிடுமாறு கோரி அர்ஜெண்டைனா சர்க்கார், பாராகுவே சர்க்காருக்கு ஒரு குறிப்பு அனுப்பி இருக்கின்றனராம்.

பிரான்சில் மீண்டும் மந்திரி சபை நெருக்கடி

மொராக்கோ சிக்கல் காரணம்

பாரிஸ், அக். 6—

பிரான்சில் மீண்டும் மந்திரி சபை நெருக்கடி ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது. பிரதமர் பாவ்ரே மொராக்கோ நிலைகள் குறித்துக் கையாண்டுவரும் கொள்கையை மந்திரி சபையில் இடம் பெற்றுள்ள டிகால் கட்சியினர் பகிரங்கமாகவே எதிர்க்கின்றனர். இத்த எதிர்ப்பை ஒட்டி, பிரதமர் பாவ்ரே, அந்தக் கட்சியைச் சேர்ந்த மூவரை மந்திரி பதவிப் பொறுப்பிலிருந்து விலக்கி வைத்திருக்கிறார் எனத் தெரிகிறது.

டிகால் கட்சியினர், தேசியப் பாதுகாப்பிற்கான ஒரு சர்க்கார் அமைக்க பாவ்ரே வழி செய்ய வேண்டும் எனக் கோருகின்றனர்.

பதவியிலிருந்து நீக்கப்பட்ட டிகால் கட்சியினரில், வெளி நாடுகளில் உள்ள திட்டுகளுக்கான இலாகா உதவிச் செயலாளரும் ஒருவர் ஆவார்.

கடந்த ஏழு மாத காலமாகப் பதவி வகித்து வரும் பிரதமர் பாவ்ரே, தேசியச் சட்டசபையின் அவசரக் கூட்டம் ஒன்று கூட்டி, அதில், தான் வடஆப்பிரிக்கா நிலைகள் குறித்துக் கையாண்டு வரும் கொள்கையினை ஆதரித்துத் தம் மீது நம்பிக்கை தெரிவிக்குமாறு கோரப் போகிறார் என்றும் தெரிகிறது.

டிகால் கட்சியைச் சேர்ந்த போக்குவரத்து இலாகா மந்திரி மட்டும், தான், பாவ்ரேயின் கொள்கையினை ஆதரிப்பதாகக் கூறி தொடர்ந்து பதவியிலிருந்து வருகிறார்.

கோவாவில் சுராவர்த்தி!

பெல்காம், அக். 6—

அவாமி லீக் தலைவரான டாக்டர் எச். எஸ். சுராவர்த்தி, கராச்சியிலிருந்து விமானம் மூலம் கோவா வந்திருப்பதாக கோவா சர்க்கார் வானொலி அறிவித்திருக்கிறது.

பாகிஸ்தானில் உள்ள போர்ச்சுகல் தூதவரும் அவருடன் கோவா வந்திருக்கிறாராம்.

விமான நிலையத்தில் கோவா தலைமை நிர்வாக அதிகாரியும், கவர்னர் - ஜெனரலின் மெய்க்காப்பாளரும், இதரரும், முஸ்லிம்கள் பலரும் சுராவர்த்தியை வரவேற்றனராம்.

'பெட்ரோல்' பஞ்சம்!

பெல்காம், அக். 5—

கோவாவில் 'பெட்ரோல்' பஞ்சம் ஏற்பட்டிருப்பதாகத் தகவல் கிடைத்திருக்கிறதாம்.

கள்ளச் சந்தையில், 'பெட்ரோல்' 'காலன்' ஒன்றுக்கு ஒன்பது ரூபாய் வீதம் விற்கப்படுகிறதாம்!

தலைநகரம் மாற்றப்படாது!

திருவனந்தபுரம், அக். 6—

"கேரள மாநிலம் அமைக்கப்படுமானால், இப்போதுள்ள தலைநகரம் திருவனந்தபுரத்தை விட்டு மாற்றப்படமாட்டாது; கேரள மாநிலம் அமைக்கப்படுமா என்பதுபற்றி இப்போது எங்களுக்கு எதுவும் தெரியாது," என்று, மராமத்து இலாகா மந்திரி வேலாயுதன், சட்ட சபையில் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் தெரிவித்திருக்கிறார்.

இலங்கை திராவிடர் துயரங்கள்

நேருவுடன் நெல்லை எம். பி. பேச்சு

புதுடில்லி, அக். 3—

இலங்கையிலிருந்து வேலையற்றுத் திரும்பும் இந்தியர்களின் கஷ்டங்கள் குறித்து நெல்லை வட்ட மக்கள் சபை காங்கிரஸ் கட்சி உறுப்பினரான பி. டி. தாணுப் பிள்ளை பிரதமர் நேருவையும், இதர அதிகாரிகளையும் சந்தித்து, இலங்கையிலிருந்து திரும்புவோரில் பெரும்பாலானோர் தென்னாட்டவர் என்றும், எனவே, தென்னாட்டை ஒட்டியது இந்தச் சிக்கல் என்றும் விளக்கியதாகவும் தெரிகிறது.

இதன் விளைவாக, சீக்கிரமே சென்னை சர்க்காரும், மத்திய சர்க்காரும் இந்த சிக்கல் குறித்து விவாதிப்பர் என்று தெரிகிறது.

பத்திரிகை ஆசிரியர் பட்டினிப் போர்!

புதுடில்லி, அக். 6—

இங்கிருந்து உருது மொழியில் வெளிவரும் 'தேஜ்' என்ற தின இதழின் ஆசிரியரான ஜம்னுதாஸ் சுக்தார் என்பார், இன்று அலுவலகத்திற்குள்ளேயே பட்டினிப் போர் தொடுத்திருக்கிறாராம்.

அவருக்கு ஆதரவாக, ஆசிரியப் பகுதி ஊழியர்கள் அனைவரும் வேலை நிறுத்தம் செய்திருக்கின்றனராம்.

'பொருளாதார நெருக்கடி' என்று கூறி, அந்த ஆசிரியரை வேலையிலிருந்து நீக்குவதற்கான முன்னறிவிப்பு நிர்வாகிகளால் நேற்று தரப்பட்டதுதான் அவரது உண்ணாவிரதத்திற்குக் காரணம் என்று கூறப்படுகிறது.

அவர், அந்தப் பத்திரிகையில், கடந்த எட்டு ஆண்டுகளாக ஆசிரியராகப் பணிபுரிந்து வருகிறாராம்.

மான்சிங் சீடர்கள்

பழி வாங்க முற்படுகின்றனர்

குவாலியர், அக் 6—

சில நாட்களுக்கு முன்பு சுட்டுக் கொல்லப்பட்ட பிரபல கொள்ளைக் கூட்டத்தின் தலைவனான மான்சிங்கின் சீடன் என்று கூறப்படும் ரூபா என்பவன், ஒரு கோஷ்டியுடன், நேற்றுமாலை சூரிய மறைவுக்குமுன், பிந்து மாவட்டத்தில் உள்ள ஒரு கிராமத்தில் புகுந்து 10 பேர்களைக் கொலை செய்ததாகவும், ஒருவரைக் காயப்படுத்தியதாகவும் செய்தி கிடைத்திருக்கிறது.

இந்தப் படுகொலைக்கு, பழிவாங்கும் நோக்கமே காரணம் என்றும் கூறப்படுகிறது.

உரிமையை பயன்படுத்துகின்றனர்

சராசரியில், 7 நிமிடத்திற்கு ஒரு விவாக ரத்து விகிதம் ஜப்பானில் பெருகியுள்ளதாம். முன்பு எப்போதையும்விட, பெண்கள்தான், அதிக விவாக ரத்து செய்கின்றனர்; போர்ப் பிற்காலத்தில், தங்களுக்குக் கிடைத்த உரிமையை அவர்கள் அதிகம் பயன்படுத்துவதையே இது காட்டுகிறதாம்!

'பெல்லாரி பற்றி பேச விரும்பவில்லை'

ஆந்திரத் தூதுக் குழுவிற்கு நேரு பதில்

புதுடில்லி, அக். 6—

'மைசூருடன் இணைக்கப்பட்ட பெல்லாரியை மீண்டும் ஆந்திர மாநிலத்துடன், இணைக்கக் கூடாது' என்ற கர்நாடக அரசியல் வாதிகளின் குரலுக்கு எதிராக, பெல்லாரி ஆந்திரர்கள் தூதுக் குழு ஒன்று பிரதமர் நேருவைச் சந்தித்து, 'பெல்லாரியை மீண்டும் ஆந்திரத்துடன் இணைக்கவேண்டும்' என்று வற்புறுத்துவதற்காக டில்லி சென்றிருக்கிறது.

ஆனால் பிரதமர் நேரு தான் இவர்களைச் சந்திக்க விரும்பவில்லை எனவும், மாநிலப் புனரமைப்புக் குழுவின் சிபாரிசுகள் வெளியாகும் வரை தான் இதுபற்றிப் பேசுவதற்குத் தயாராக இல்லை என்றும் தெரிவித்துவிட்டதாகக் கூறப்படுகிறது.

ம. சோ. கட்சியில் பிளவு

'தேசீய நஷ்டம்' என கிருபளானி கூற்று

பாட்னா, அக். 6—

"ம. சோ. கட்சியில் தற்போது ஏற்பட்டுள்ள பிளவு ஒரு பெரும் 'தேசீய நஷ்டமா'கும்," என்று, தோழர் கிருபளானி கருத்தறிவித்திருக்கிறார்.

டாக்டர் ராம்மனோகர் லோகியாவிடம் தமக்கு வேற்றுமைகள் எதுவும் இல்லை என்றும், அவரைப் பன்முறை தாம் அழைத்திருப்பதாயும், ஆனால், லோகியா, தான் 'துப்பாக்கி முனை'யில் பேச விரும்புவதாயும் கிருபளானி தெரிவித்திருக்கிறார்.

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 7—10—'55 வெள்ளி

கேடுகள் அகல!

'ஆயிரமுண்டிங்கு சாதி' என்று பாடிய அதே பாரதி, 'சாதிகள் இல்லையடி பாப்பா' என்றும் பாடினர்.

"முன்னையது, 'வெள்ளையரின் ஏகாதிபத்தியத்தை எதிர்ப்பதற்கு, எல்லோரும் தங்கள் சாதிகளை மறந்து ஒன்றுபட வேண்டும் என்ற கருத்தையும், பின்னையது, 'வெள்ளையன் வெளியேறிய பிறகு உருவாகிற சமுதாயம், சாதிகளற்ற சமுதாயமாக இருக்க வேண்டும்' என்ற கருத்தையும் வலியுறுத்துவதாகும்," என்று, பாரதி அன்பர்கள், பொருள் விரித்துக் கூறி மகிழ்வர்.

எப்படியோ, பாரதி மட்டுமல்ல—எல்லா காங்கிரஸ் தலைவர்களுமே, 'பிரிட்டிஷார் இந்தியாவைவிட்டு வெளியேறிய பிறகு நாட்டில் மலிந்து கிடக்கும் சாதிகள் பலவும் ஒழிக்கப்பட்டு, உயர்ந்தவன்—தாழ்ந்தவன்—தீண்டப்படாதவன் என்ற வேற்றுமைகள் அகன்றுவிடும்,' என்று கூறிவந்தனர்; ஆனல், 'சுதந்திரம்' கிடைத்த பின்னர்தான், இந்தியாவின் பல பாகங்களிலும்—காங்கிரசாரிடையேகூட சாதிவெறி தலைக்கேறி இருப்பதை நாம் காண்கிறேம்.

'ஜனநாயகம் உதயமான பிறகு சாதிகளெல்லாம் மறைந்துவிடும் என்று நினைத்தோம்; ஆனல், வெள்ளையர் ஆட்சியில் இருந்ததைவிட சாதி உணர்ச்சி இப்போது அதிகமாகியிருக்கிறது,' என்று, உள்நாட்டு மந்திரி பண்டித பந்த் புதுடில்லியில் பேசுகையில் குறிப்பிட்டிருப்பது, இதற்கு ஆதாரமாகும்.

'சாதி முறைகள் நாட்டிலே நிலவுகின்றன-அவை கொடுமை மிக்கவை—நாகரீக உலகத்தில் இருக்கக் கூடாதவை — மக்களிடையே ஒற்றுமையற்றுப் போகச் செய்பவை—மனிதர்களிடையே ஏற்றத் தாழ்வைக் கற்பிக்கின்றவை — அவை ஒழியவேண்டும் — ஒழிக்கப்படவேண்டும்,' என்று ஆட்சிப் பீடத்தில் அமர்ந்திருக்கும் மந்திரிகள் முதல் சாதாரண காங்கிரஸ் தலைவர்கள் வரை சொல்லாதிருப்பதில்லை.

இப்போது தமிழ் நாட்டில் சுற்றுப் பயணம் செய்த இந்தியப் பிரதமர் பண்டித நேரு, இடம் தவருமல், 'நமது முன்னேற்றத்திற்கு சாதிய முறைக் கேடுகள் முட்டுக்கட்டையாயிருக்கின்றன; அவைகளை ஒழிக்கவேண்டும்,' என்று பேசத் தவறவில்லை.

ஆனுலும், சாதிகளையும், அதன் கிளையான தீண்டாமையையும் ஒழிக்க வழிதான் என்ன?—என்பதை, அவர்கள் சொல்லில் காணேம்!

நாட்டிற்கான சட்டங்களையும், திட்டங்களையும் தீட்டவும், அமுல் செய்யவும், நிறைவேற்றவுமான அதிகாரங்களையும், வாய்ப்பினையும் பெற்றிருக்கிற பண்டித வல்லப பந்த், சாதி முறைக் கொடுமைகளைக் குறித்து வெகு அழகாகப் புதுடில்லியில் பேசியிருக்கிருர்; ஆனல், 'அந்தக் கொடுமையைக் களைவதற்கு வழிஎன்ன?'—என்ருல், 'கண்டு பிடிக்க வேண்டும்' என்று பதில் கூறுகிருர்.

'சாதியம், மதத்தினுல் அங்கீகரிக்கப்பட்டு, அதன் ஒரு அம்சமாகவே கருதப்பட்டு பின்பற்றப்படுகிறது; மனிதனுக்கு ஊக்கத்தையும், உற்சாகத்தையும் தரக்கூடிய புனித இடங்களான கோவில்களில் கூட ஒரே மதத்தைச் சேர்ந்தவர்களுக்கு (அவர்கள் தாழ்த்தப்பட்டவர்கள் என்பதால்) இடம்தர மறுக்கிறேம்; இது கேவலமானது; உலகம் ஒன்றுபட துரிதமாக முன்னேறிக் கொண்டிருக்கையில், நமது சமூகத்தில் இந்தக் கொடுமை நீடிப்பது, துரதிருஷ்டவசமாகும்' என்று பண்டித பந்த் புலம்பியிருக்கிருர்.

'ஒழிய வேண்டும்—ஒழியத்தான் வேண்டும்' என்று பேசுவதும், 'தீண்டாமை அனுஷ்டிப்பது தண்டனைக்குரிய குற்றம்,' என்று சட்டம் இயற்றிவிடுவதும் மட்டும் சாதிகளையும், தீண்டாமைக் கொடுமையையும் ஒழிக்கப் போதுமான நடவடிக்கைகளாகிவிட முடியாது—என்பதை, பண்டித பந்த் உணர்ந்திருக்கிருரோ என்னவோ?

அவர் ஒப்புக்கொண்டிருக்கிருர்,—'சாதி முறை, மதத்தின் ஒரு அம்சமாக அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது' என்பதை! அப்படியானுல், சாதிக்கேடுகளைக் கண்டிப்பதானுல், அவற்றை உற்பத்தி செய்யும் மதமும் கண்டிக்கப்பட்டாக வேண்டும்.

ஆனுலும், பண்டித பந்த், 'மதம், சாதிகளை அங்கீகரித்திருப்பது தவறு' என்ற பொருள்பட பேசியிருக்கிருரே தவிர, மதத்தினைக் கண்டித்துப் பேசவில்லை.

மதத்தினைக் கண்டித்துப் பேசுகிற துணிவும், தெளிவும், பண்டித பந்த் போன்ருருக்கு இல்லையென்று கூறிவிட முடியாது; ஆனுலும், தனக்குள்ள துணிவை அவர் நிலை நாட்டக் காணே[illegible].

சாதிகளின் ஊற்றுக்காலாக மதம் விளங்குகிறது'என்பதை உணர்ந்த ஒருவரின் உள்ளம், இயற்கையாகவே, அந்தமதம் மக்களுக்குத் தேவைதானு?'—என்ற கேள்வியை எழுப்பும். ஆனல், அந்தக் கேள்வியை பண்டித பந்த் எழுப்பக் காணேம்!

மதவாதிகளின் மனம் புண்படக்கூடாது; அவர்களின் சீற்றத்திற்கு ஆளாகக்கூடாது; மதத்தை அறியாமையினுல் பலரும், 'இலாபம்' கிடைப்பதினுல் சிலரும் பின்பற்றுகிருர்களே, அவர்களின் கோபத்திற்கும் ஆளாகக்கூடாது; ஆனுலும் சாதிகள் ஒழியவேண்டும்—எப்படி முடியும்?

சாதிமுறைக் கேடுகளை, தீண்டாமைக் கொடுமையினை மட்டும் மதம் கொண்டிருக்கவில்லை; மக்களிடையே மலிந்து கிடக்கும் பலவகைக் கேடுகளுக்கும் பிறப்பிடமாகத்தான் மதம் இருந்து வருகிறது.

'சாதி ஒழிய வேண்டும்,' என்று எவரேனும் உண்மையில் விரும்பினுல், 'அவற்றைத் தோற்றுவிக்கும் பிறப்பிடம் ஒழிந்தாக வேண்டும்' என்று சொல்லத் தேவையில்லை.

பண்டித பந்த்,பண்டித நேரு போன்று ஆட்சிப் பீடத்தில் அமர்ந்திருப்போர், சாதிக்கேடுகளை ஒழிக்க வேண்டுமென பொழுதுபோக்கிற்காக அல்லாது, தம்மையும் முற்போக்குவாதிகள் என்று தம பட்டமடித்துக் கொள்வதற்காக அல்லாது, உண்மையில் இருதய சுத்தியோடு கூறுபவர்களேயானுல், சாதிக் கேடுகள், தீண்டாமைக் கொடுமைகள் மட்டுமின்றி, சமூகத்தில் மலிந்து கிடக்கும் அவை போன்ற தீமைகள் ஒழிவதற்கு நாம் இடைவிடாது கூறிவந்திருக்கிற கருத்துக்களைச் சிந்தித்துப் பார்த்தாகவேண்டும்.

நாம் கூறிவருகிற வழிகளில்லாது, அந்தத் தீமைகள் ஒழிவதற்குக் கூறப்படும் வேறு வழிகள் பயன்படும் என்று தோன்றவில்லை.

தொழிற் பயிற்சி முகாம்கள்

மேலும் பல துவக்குவதற்குத் திட்டம்

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டகாலத்தில் தேவைப்படும் பயிற்சி பெற்ற தொழிலாளர்களைத் தயாரிப்பதற்கான தொழிற் பயிற்சிக்குரிய அபிவிருத்தித் திட்டங்கள் பலவற்றை மத்திய தொழிலாளர் இலாகா மந்திரி சபை தயாரித்திருக்கிறது.

இந்தத் திட்டங்கள் இப்போது திட்டக் குழுவின் பரிசீலனையிலிருப்பதாகவும் தெரிய வருகிறது.

திட்டங்களின்படி, நாடெங்குமுள்ள தொழிற் பயிற்சிக்கூடங்கள், முகாம்களில் எல்லாம், ஒரே நேரத்தில் சுமார் 30,000 பேர்களுக்குப் பயிற்சியளிக்க முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இரண்டாம் திட்டப்படி சுமார் ஒரு கோடி பேருக்கு வேலை தர வேண்டுமென்பது சர்க்கார் திட்டம். இவற்றில் 5 சதவிகிதம் தொழில் நுணுக்கப் பயிற்சி பெற்ற வேலைகளாயிருக்கக்கூடும்; அப்படியாயின், ஆண்டு ஒன்றுக்கு ஒரு இலட்சம் பேர் தொழில் நுணுக்கப் பயிற்சி பெற்ருக வேண்டும் என்று கணக்கிட முடிகிறதாம்.

ஆயுதங்களின் அளவைப் பொறுத்துள்ளதாம்!

லண்டன், அக். 5—

"இந்தியாவிடமிருந்து, எகிப்து, ஆயுதங்கள் வாங்கிக் கொள்ள இருப்பதாகச் செய்திகள் வெளியாகியுள்ளதே — அப்படியானுல், மத்தியக் கிழக்கில் நெருக்கடி நிலைமை குறையக் கூடுமா?", என்று, வெளிநாட்டு இலாகா அதிகாரி ஒருவரை நிருபர்கள் வினவியபோது, அவர், 'நிலைமை முற்றுவதும், மோசமடைவதும் ஆயுதங்களின் அளவைப் பொறுத்ததாகும்" என்று குறிப்பிட்டுள்ளார்.

வடநாட்டில் உருவாகும் ஹிராகுட் அணைக்கட்டு

முதற்கட்ட வேலைக்கு ரூ. 70,78,00,000 செலவு

37,000 தொழிலாளர்கள் பணியாற்றியுள்ளனர்

பல ஆண்டுகளாக ஆயிரக்கணக்கானவர்கள் அரும்பாடுபட்டு உழைப்பதின் காரணமாக ஹிராகுட் அமைப்பு வேலை இப்பொழுது உச்ச நிலையை அனேகமாக அடைந்துவிட்டது. இந்தியாவிலேயே மிக நீளமான இந்த மகத்தான மண் அணை, படிப்படியாக உயர்ந்து வருகிறது.

பிரதான அணையும், காங்கிரீட் நீர்வழி வடிகால்களும் கட்டப்பட்டு, மண் அணைக்கட்டுகளும் அமைக்கப்பட்டு, மாபெரும் நீர்த்தேக்கம் ஒன்று உருவாகி வருகிறது. இப்பொழுது வெறும் மழையையே நம்பியிருக்கும் 6,72,000 ஏகரா நிலத்துக்கு உறுதியான நீர்ப்பாசனம் அளிக்கக்கூடிய 'உயிர்நாடி'களான கால்வாய்கள் வெட்டப்பட்டு வருகின்றன.

திட்டத்தின் முக்கிய அம்சங்களாவன:—

1. மூன்று மைல் நீளத்துக்கு காங்கிரீட் - மண் அணையும் அதன பக்கவாட்டில் இடதுபுறம் $6\frac{1}{4}$ மைல் நீள மண் கரையும், வலதுபுறம் $6\frac{3}{4}$ மைல் நீள மண்கரையும் போடுதல்.

நீர்வழி வடிகால்கள் காங்கிரீட்டில் கட்டப்படுகின்றன; பவர் அணை சுவர்கள் கட்டுமான அமைப்பு; அணையின் பாக்கிப் பகுதிகள் மண் அமைப்பு. மிக ஆழமான அஸ்திவாரத்திலிருந்து அணையின் உச்ச உயரம் 197 அடி இருக்கும்.

2 கால்வாய் ஏற்பாட்டில் பிரதான நீரோட்டக் கால்வாய்கள் இரண்டும், மற்றப்படி கிளைகளும் உப கால்வாய்களும், வாய்க்கால்களும் உள்ளன.

மொத்தம் கால்வாய்கள், கிளைக் கால்வாய்கள், உப கால்வாய்கள், வாய்க்கால்கள் முதலியனவற்றின் நீளம் 552 மைல்களுக்கு இருக்கும்; தண்ணீர் போக்குகள் சுமார் 9,500 மைல்களுக்கு இருக்கும்.

3 பிரதான அணையில் 1,23,000 கிலோவாட் மின்சாரம் உற்பத்தி செய்யக்கூடிய இயந்திரங்கள் கொண்ட 'உற்பத்தி நிலயம்' ஒன்று கட்டப்படும்; மேலும் மின்சார உற்பத்தி 'யூனிட்'டுகள் மூன்று அமைக்கவும் இதில் வழி செய்யப்பட்டிருக்கும்.

4. உயர்ந்த வால்டேஜ் மின்சார சக்தியை எடுத்துச் செல்வதற்காக 506 மைல்களுக்கு 'லைன்'கள் போடுதல்.

இவைகள்தான் இத்திட்டத்தின் முதற்கட்ட வேலைகள்; இதற்கு ரூ. 70,78,00,000 செலவாகும்.

வேலை மிக மகத்தானது

பிரதான அணை சம்பந்தத்தில் மட்டுமே 43,24,00,000 கன அடி மண் வேலையும், 381 இலட்சம் கன அடி காங்கிரீட் கட்டுமான வேலையும், 478 இலட்சம் கன அடி கல் கட்டுமான வேலையும் உள்ளதென்ருல், வேலை எவ்வளவு மகத்தானது என்பதை ஓரளவு யூகித்துக்கொள்ளலாம். மண் கரைகள் போடுவதற்காக 19,77,00,000 கன அடி மண்ணும், கால்வாய்களுக்காக 66,67,00,000 கன அடி மண்ணும் வெட்டி எடுக்க வேண்டிய பிரம்மாண்டமான வேலையிருக்கிறது.

ஆட்களும், இயந்திரங்களும்

இவ்வளவு மாபெரும் வேலையைப் பூர்த்தி செய்வதற்கு நிறைய ஆட்கள் பலமும், இயந்திர சாதனங்களின் உதவியும் அவசியம் இருக்கவேண்டும். அமைப்பு வேலை உச்ச நிலையில் இருந்த காலத்தில் சுமார் 37,000 தொழிலாளர்கள் இதில் ஈடுபட்டு வேலை செய்து வந்தனர். அப்படி இருந்த போதிலுங்கூட இந்த வேலை மனித உழைப்பால் மட்டும் நிறைவேற்றி வைக்க முடியாததோர் மகத்தான காரியமாகவே இருந்தது; எனவே, பெரும் சக்திவாய்ந்த இயந்திரங்கள் சிக்கனத்தை முன்னிட்டும், வேலை விரைவாக நடப்பதற்காகவும் பயன்படுத்தப்பட்டன.

காங்கிரீட் போடுவதும், மண் வேலையும், அனேகமாக பூராவும் இயந்திர சாதனங்கள் கொண்டே நடத்தப்பட்டு வருகின்றன. இதற்காகப் பெருவாரியாக மண் தோண்டியெடுத்து, அதை வண்டிகளில் போட்டு, இழுத்துச் செல்வதற்காகப் பலவித இயந்திர சாதனங்கள் உபயோகிக்கப்பட்டு வருகின்றன; காங்கிரீட் கலவை இயந்திரங்கள் பெரியதாக இரண்டு இருக்கின்றன; இவற்றுக்குக் கற்கள் உடைத்துக்கொண்டு சென்று போடவும் இயந்திர சாதனங்கள் உள்ளன.

தொழிலாளர்களுக்குக் குடியிருப்பு, தண்ணீர் விநியோகம், சுகாதாரம் விளக்கு, பொழுதுபோக்கு முதலிய வசதிகள் செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றன. 1952-ம் ஆண்டில் நிரமையான இலாகா தொழிலாளர்களுக்காக சர்க்கார் குடியிருப்பு விடுதிகள் 1.206 இருந்தன—இன்று, 3,891 இருக்கின்றன. முன்பு 23 குழாய்களிருந்தன—இன்று 57 குழாய்கள் இருக்கின்றன.

மார்ச் மாதம் முடிவுவரை ரூ. 42,53,00,000 செலவு செய்யப்பட்டிருக்கிறது. 1955—56-ல், இதற்குச் செலவு செய்யப்படுவதற்காக ரூ. 17,38,00,000 ஒதுக்கப்பட்டிருக்கிறது; 1955—56-ம் ஆண்டில் மே மாதம் முடிவு வரை ரூ 56,94.000 செலவு செய்யப்பட்டிருக்கிறது.

நூற்றுண்டு விழா

சென்னை மிருகக் காட்சிசாலை கொண்டாடுகிறது

1855-ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட சென்னை மிருகக் காட்சிச்சாலை, இந்தியாவிலேயே மிகப் பழமையானதென்று சொல்லப்படுகிறது; இதன் நூற்றுண்டு விழா இம்மாத இறுதியில் நடைபெறப் போகிறது.

தற்போது 11 ஏக்கர் பரப்பளவில் உள்ள இக்காட்சிச்சாலையை 21 ஏக்கர் பரப்பளவில் விரிவாக்குவதற்கு, சென்னை நகர சபை அதிகாரிகள் திட்டம் வகுத்துள்ளனர்.

இம்மிருகக் காட்சிச் சாலையில் தற்போது 600 விலங்குகளும், பறவைகளும் இருக்கின்றன. நூற்றுண்டு விழாவையொட்டி, ரஷ்யா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா, ஜெர்மனி போன்ற வெளிநாடுகளிலிருந்தும், இந்தியாவின் பல பாகங்களிலிருந்தும், விதவிதமான விலங்குகளும், பறவைகளும் வந்திருக்கின்றன—வந்து சேர்ந்துகொண்டிருக்கின்றன; ஓநாய்கள், பனிக்கரடிகள், முதலைகள், ஆமைகள், விசித்திரமான பறவைகள் ஆகியவை காணக்கூடியவையாகும்.

பீகாரில் அமைதியின்மை

காங்கிரசாருக்குக் கவலை தருகின்றதாம்!

பாட்னு, அக். 4—

பீகார் மாநிலத்தின் அமைதியற்ற சூழ்நிலைகள் காங்கிரஸ் கட்சிக்குப் பெரும் கவலையைத் தருகின்றனவாம்.

மாநிலத்தில் அமைதியையும், ஒழுங்கையும் நிலைநாட்டுவதில் சர்க்கார் அதிகாரிகளுடன், பொது மக்கள் ஒத்துழைக்க வேண்டுமென பீகார் காங்கிரசார் தீர்மானம் ஒன்று நிறைவேற்றியிருக்கின்றனர்.

காங்கிரசாரும் நிலையை உணர்ந்து, மக்களுடன் மீண்டும் தொடர்புகொண்டு, அமைதியைக் காக்க முற்படவேண்டும் என்றும், நடைபெற்ற இரகசியக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

கூட்டத்தில் தலைவர் தேபரும் கலந்துகொண்டிருக்கிருர்.

மூங்கில் மூலம் பெருமளவு வருமானம்

அமெரிக்கா திட்டம்

மூங்கில், அமெரிக்காவின் தெற்குப் பகுதியில் முக்கிய விளைபொருளாக அமையக்கூடும்.

அமெரிக்காவிலுள்ள சில பிரதேசங்களில் கிடைக்கும் மூங்கில்களைக்கொண்டு மரச் சமான்கள், கொடிக் கம்பங்கள், தோட்டக் கம்புகள், அலங்கார வேலிகள் போன்றவை தயாரிக்கப்படுகின்றன; இதனால், மூங்கில் தோப்புச் சொந்தக்காரர்களுக்குத் திருப்திகரமான வருமானம் கிடைக்கின்றது.

உணவுக்காக இப்பொழுது அமெரிக்காவில் ஆண்டொன்றுக்கு 5,00,000 டாலர் மதிப்புள்ள 'மூங்கில் முளை'கள் விற்கப்படுகின்றன. தேவையான முறையில் விளம்பரம் செய்தால் இவைகளை உணவுப் பொருட்களாகப் பயன்படுத்துவதை மேலும் பிரபலமாக்கலாம்.

காந்தியார் பிறந்த நாள் விழாவில் கலாட்டா!

மூவர் கைது

எர்ணகுளம், ஆக. 4—

இங்கிருந்து பத்து மைல் தொலைவில் உள்ள பிழலா எனும் இடத்தில் காந்தியார் பிறந்த தின விழாக் கூட்டம் நடைபெற முடியாத குழப்பம் ஏற்பட்டதாகத் தெரிகிறது.

ஒரு கத்தோலிக்க பள்ளி மண்டபத்தில் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது; கூட்டம் துவங்குவதற்குச் சிறிது நேரம் இருக்கும்போது, 'பள்ளி மண்டபத்தில் இந்தக் கூட்டம் நடைபெறக் கூடாது' என்று ஒரு பிரிவினர் ஆட்சேபித்தனர்; மற்றொரு பிரிவினர், கூட்டம் நடத்துவதற்கு அனுமதியளித்த பள்ளி நிர்வாகிகள் செயல் சரியானதே,' என்று வாதிட்டனர்.

இரு சாராரும், தங்களுக்கிடையே எழுந்த இந்தத் தகராறுகளை வாய்ச் சொற்களால் தீர்த்துக் கொள்ள முடியாது போய்விடவே, அடிதடியில் ஈடுபட்டிருக்கின்றனர்.

பின்பு, போலீசார் தலையிட்டு மூன்று பேர்களைக் கைது செய்தனர் என்றும், கூட்டம் கைவிடப்பட்டது என்றும் தெரியவருகிறது.

சென்னை மாநில க்ஷவரத் தொழிலாளர் சங்கம்

27—9—55ல், சென்னை—சூளை பட்டாளத்திலுள்ள ஆஞ்சநேயர் கோவில் மண்டபத்தில், மேற்படி சங்கத்தின் பொதுச்சபைக் கூட்டம் தோழர் கே. ஆர். இராஜகோபால் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் பா. சம்புலிங்கம், ந. சிவாநந்தம், தீனதயாளு, கே. பாஸ்கரன், எஸ். பழனி, பி. சி. கல்யாணசுந்தரம் ஆகியோர் மேற்படி சங்கத்தின் அவசியம் குறித்தும், மற்றும் பல முக்கிய பிரச்சினைகள் பற்றியும் சொற்பொழிவாற்றினர். இறுதியில், சங்க உறுப்பினர்களிடம் மாதச் சந்தாவாக நாலணா வசூலித்ததை இனி, ஆறு மாதத்திற்கு ஒரு ரூபாய் வீதம் வசூலிப்பதென்றும், விரைவில் சங்கச்சார்பில் ஒரு பொதுக் கூட்டம் நடத்துவதென்றும், வாரத்தில் ஒரு நாள் கடையடைப்பு சம்பந்தமாக நன்கு பரிசீலித்து விரைவில் அதற்கான நடவடிக்கை எடுப்பதென்றும், சென்னையில் உள்ள எல்லா வட்டங்களிலும் சங்கக் கிளைகளை ஏற்படுத்துவதுடன், மாவட்டந்தோறும் சங்கங்கள் அமைத்து, அவற்றை மத்திய சங்கத்துடன் இணைப்பது என்றும், இந்த வேலையை ஆங்காங்குள்ள பொதுச்சேவை உள்ளம் படைத்த நண்பர்கள் முயற்சி எடுத்துச் செய்யும்படிக் கேட்டுக்கொண்டும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

வடக்கே எஞ்சின்—தெற்கே பெட்டி!

"நாட்டின் இணைப்புக்குச் சின்னமாக விளங்கும் இரயில் பெட்டி தொழிற்சாலை, பெரம்பூரில், பெருமிதத்துடன் ஆரம்பமாகிவிட்டது.

"வடக்கிலே எஞ்சின் உற்பத்தி செய்கிறார்கள்; தெற்கிலே பெட்டி உற்பத்திசெய்கிறார்கள்; 'செய்கிறார்கள்' என்பதைவிட 'இனிமேல் படிப்படியாகச் செய்யப் போகிறார்கள்' என்று சொன்னால், இன்னும் பொருத்தமாக இருக்கும்;

"தொழிற்சாலையைவிட அது பற்றிய விளம்பரமும், பிரச்சாரமும்தான் பலமாக அடிபடுகிறது; காட்சிக்கு வைக்கப்பட்டிருந்த முதல் பெட்டி முழுவதும், பெரம்பூர் தொழிற்சாலையிலேயே உற்பத்தி செய்யப்பட்டு விட்டதாக நினைப்பதுதான் தவறு; இந்தப் பெட்டியின் பெரும் பகுதி (90சதவிகிதம் என்றே சொல்லலாம்) வெளிநாடுகளிலிருந்து—குறிப்பாக சுவிட்சர்லாந்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்டது; இணைப்புக்கு 'வெல்டு' செய்யும் வேலைதான் பெரம்பூரில் நடைபெற்றதாம்;

"வடக்கு-தெற்கு வேற்றுமைக்கு 'வெல்டு' செய்வதுதான் நேருவின் சுற்றுப்பயண நோக்கம்—என்றும் சிலர் சொல்லுகிறார்கள்;

"யார் எப்படி நினைத்தபோதிலும், தென்னாட்டில் இரயில் பெட்டித் தொழிற்சாலை அமைந்திருப்பது மிகவும் பொருத்தமானது; இந்தியாவின் இணைப்பை மட்டுமல்ல—தென்னாட்டின் நிலையையும் இது எடுத்துக்காட்டுகிறது; வடக்கே எஞ்சின் உற்பத்தியாகிறது - தெற்கே பெட்டி உற்பத்தியாகிறது; எஞ்சினுக்குப் பின்னால் போக வேண்டியதுதான் பெட்டியின் வேலை.

"மத்திய சர்க்காரில் பெரும்பாலும் உத்திரப்பிரதேசவாசிகள் இருப்பதாக ஒரு அன்பர் வர்ணித்தார்; இருந்தாலும், அவருக்கு இவ்வளவு குறுகிய புத்தி கூடாது; வங்காள விரிகுடாவைப் போல மனமும் விரிந்து, விசாலமாக இருக்க வேண்டும்; பாக்ஸ் ஜல சந்தியைப் போல அது குறுகி ஒடக்கூடாது;

"வங்காளத்தில் எஞ்சின் அதாவது, இயங்கும் சக்தி-உற்பத்தியாகிறது; தெற்கே பெட்டிகள் ஏராளம்; இரண்டையும் இணைத்து உத்திரப் பிரதேசவாசிகள் ஓட்டுகிறார்கள்; இதில், டிக்கட் இல்லாமல் எவ்வளவு பேர் சவாரி செய்கிறார்கள் என்று மட்டும் கேட்டுவிடாதீர்கள்!

"சக்தியும், ஓட்டமும் வடக்கே உள்ளன; இணைப்புடன் பின் பற்றிச்செல்ல ஏராளமான பெட்டிகள் தெற்கே உற்பத்தியாகின்றன!"

இவ்வாறு, 4—10—55 'நவ இந்தியா' இதழில், 'யூ. ஆர்.' என்பவர் குறிப்பிட்டுள்ளார்.

மதுரை மாவட்டத்தில் 'மாதிரி காலனி'

தீண்டாமை ஒழிப்புக்குப் பிரசார சாதனமாம்!

மதுரை மாவட்டம் பழனி தாலுகா, கரியம்பட்டி கிராமத்தில் 80 அரிசனக் குடும்பங்களுக்கும், 10 கவுண்டர் குடும்பங்களுக்கும், 90 வீடுகள் கொண்ட 'மாதிரி காலனி'யொன்றை அமைப்பதற்கான வீடுகட்டும் திட்டமொன்றுக்கு சென்னை சர்க்கார் அனுமதி அளித்திருக்கின்றனர்.

1954 செப்டம்பரில் ஏற்பட்ட ஒரு தீ விபத்தில், அரிசனச் சேரி முழுவதும், நாசமடைந்ததை ஒட்டி, அந்தக் காலனி ஏற்படுவதற்கான அவசியம் ஏற்பட்டது.

இந்தத் திட்டத்தின் கீழ், ஒவ்வொரு வீட்டிற்கும், ரூ. 1,350 செலவாகிறது.

இதில், பெருவாரியான அரிசனங்கள் நிலமில்லாதவர்கள்; கவுண்டர்களிடம் பண்ணையாள் வேலை செய்பவர்கள்.

அரிசன மக்களின் வீடுகள் கட்டி முடிக்கப்படும் வரையிலும், அதில் ஈடுபட்டுள்ள அரிசனங்களுக்கு இலவச உணவு அளிப்பதற்கு கவுண்டர்கள் முன்வந்திருக்கின்றனர்.

80 அரிசனக் குடும்பங்களோடு கூட 10 கவுண்டர் குடும்பங்களுக்கும் வீடுகள் தேவையாக இருக்கிறது; இவர்களும் இத்திட்டத்தில் சேர்ந்து தங்கள் உடல் உழைப்பை அளிப்பதாகத் தெரிவித்திருக்கின்றனர். அத்துடன், மேற்கொள்ளப்பட்ட 10 கவுண்டர் குடும்பங்களும், இதே காலனியில், அரிசனங்களுடன் கூடவே வசிப்பார்கள். இதன் மூலம், தீண்டாமையை ஒழிப்பதற்கு இந்தத் திட்டம் ஒரு பிரச்சாரச் சாதனமாக உபயோகப்படுகிறது.

சரீர உழைப்பு, உணவுச் செலவு எல்லாம் போக, ஒரு வீட்டிற்கு ரொக்கச் செலவு ரூ. 460-தான் ஆகிறது.

இதில், ஒவ்வொரு குடும்பத்திற்கும் வட்டியின்றி ரூ. 240 கடனாகவும், ரூ. 220 உதவித் தொகையாகவும் வழங்குவதற்குச் சர்க்கார் உத்தரவிட்டிருக்கின்றனர். கடன் தொகை மாதம் ஒன்றுக்கு ரூ. 2- வீதம் 10 ஆண்டுகளில் திருப்பித் தரப்பட வேண்டும்.

தாய்மார் கழக மாதாந்திரக் கூட்டம்

1—10—55 மாலை 3 மணிக்கு, சென்னை பெத்துநாய்க்கன் பேட்டை தாய்மார் கழக மாதாந்திரக் கூட்டம், திரு. மயிலை சிவமுத்து தலைமையில் நடைபெற்றது. பார்வையாளராக வந்திருந்த நீதிபதி வேதநாயகம் பேரர் திரு. வி. ஜி ஆரோக்கியசாமி அவர்கள் தாய்மார் கழகத்துக்கு வாழ்த்துக் கூறினார். திரு. தணிகை உலகநாதன், 'நல்ல பெண்மணி' எனும் பொருள் குறித்தும், திரு. ஜி பக்தவத்சலம், 'பெண்டிரும் - தமிழும்' என்பது பற்றியும், கே. வி. சண்பகம், 'இசையும் - கைத்தொழிலும்' என்னும் பொருள் குறித்தும், தோழியர் பரமேசுவரி, 'அவ்வையார்' பற்றியும், செல்வி சி. எஸ். இராஜேசுவரி தமிழ் இலக்கியக் காட்சி ஒன்றையும் விவரித்துப் பேசினர்.

இறுதியில் பாரதியாரின் துணைவியார் செல்லம்மாள் பாரதி இயற்கையெய்தியமை குறித்து அனுதாபம் தெரிவித்துக்கொண்டப்பட்டதுடன், முடிச்சூர் இராமச்சந்திரன் அவர்களுக்கு ஓர் இரங்கற் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

பம்பாய்— காந்தாரியாசால் நண்பர்கள் படிப்பகம்

25—9—55 மாலை 8½ மணிக்கு, படிப்பக உறுப்பினர்களனைவருக்கும், திராவிட நாட்டுப் பிரிவினை நாளை முன்னிட்டு, படிப்பகச் செயலாளர் தோழர் த. மு. பொற்கோ சார்பில், தோழர் ஆ. கமலநாதன் அவர்கள் தலைமையில் தேநீர் விருந்தொன்று அளிக்கப்பட்டது. தோழர்கள் எம். சங்கர், எஸ். எம். சுப்பையா, சி. த. மு. இர. ஆரிய சங்காரன், டி. என். பால்ராஜ் ஆகியோர் நன்றி தெரிவித்தும், படிப்பக வளர்ச்சி குறித்தும் சொற்பொழிவாற்றினர். தோழர்கள் எம். சங்கர், ஏ. பாஸ்டின், லெனின் செல்லத்துரை, ஜி. பி கேபா ஆகியோரின் இசை விருந்தும் நடைபெற்றது.

திருத்தங்கல் அண்ணா படிப்பகம்

3—10—55 இரவு 9 மணிக்கு தோழர் கே. எஸ். பி. கணேசன் தலைமையில் நடைபெற்ற படிப்பக உறுப்பினர்கள் கூட்டத்தில் வரவு செலவு கணக்குகள் ஒப்புக்கொள்ளப்பட்டதுடன், தோழர் எஸ் பெருமாள்சாமியைச் செயலாளராகக் கொண்ட புதிய நிர்வாகக் குழுவும் தேர்ந்தெடுக்கப்பட்டது. பின்னர், வருகிற நவம்பர் திங்களில் படிப்பக ஆண்டு விழா நடத்துவதெனவும் முடிவு செய்யப்பட்டது.

ஓவியப் புலவர்கட்கு வேண்டுகோள்

"சென்னை மாணவர் மன்றச் சார்பில், கடந்த சில ஆண்டுகளாக ஓவியப் போட்டி நடத்தப்பட்டு வருகிறது. அத்துறையில் மேன்மேலும் சிறந்த பணியாற்ற ஓவியப் புலவர்களின் ஒத்துழைப்பு மிக இன்றியமையாததாகும். ஆகையால் ஓவியப் புலவர்கள், தங்கள் பள்ளி மாணவர்களனைவரையும் இப்போட்டியில் கலந்துகொள்ளச் செய்யவேண்டுகிறோம். பலருடைய வேண்டுகோளால் 16—10—55 வரை விண்ணப்பமும் கட்டணமும் அனுப்பிவைக்கலாமென்றும், 28—10—55 வரை படங்களை அனுப்பிவைக்கலாம் என்றும் கால நீடிப்பு அளித்துள்ளோம். மேலும் கையெழுத்துப் போட்டியும் நடத்துவதுடன், அழகிய கையெழுத்துக்களையும் ஓவியக் கண்காட்சியில் உடன் வைக்கிறோம்," என்று மாணவர் மன்ற போட்டிக் குழுத் தலைவர் திரு. மயிலை சிவமுத்து அவர்கள் தெரிவித்துக் கொள்கிறார்.

நெல்லை மாவட்ட வெண்ணெய், நெய் வியாபாரிகள் சங்கம்

2—10—55 மாலை 3 மணிக்கு, மேற்படி சங்க நிர்வாகக் குழுக் கூட்டம் சங்க அலுவலகத்தில், தோழர் வி பி. காளியப்பன் தலைமையில் நடைபெற்றபோது, அமெரிக்காவிலிருந்து நெய் இறக்குமதி செய்வதை இந்திய சர்க்கார் கைவிட்டதற்குப் பாராட்டுதல் தெரிவித்தும், வெண்ணெய், நெய் போன்ற முக்கிய உணவுப் பொருள்களுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்களிக்க வேண்டுமென்று சென்னை சர்க்காரைக் கேட்டுக்கொண்டும், சென்னை மாநிலத்தின் ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் ஒரு பரிசோதனைச் சாலை ஏற்படுத்தி குறைந்த செலவில் வெண்ணெய், நெய் இவைகளைப் பரிசோதனை செய்துதருவதற்கு ஏற்பாடு செய்து தரும்படி சென்னை சர்க்காரையும், மத்திய சர்க்காரையும் கேட்டுக்கொண்டும், 1954-ம் வருட உணவுக்கலப்படத் தடுப்புச் சட்டத்தின் மூலம் விதிக்கப்படும் சிறைத் தண்டனையை ரத்துச் செய்ய வேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக்கொண்டும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பாராட்டுக் கூட்டம்

வாணியம்பாடி நகரசபையில் உறுப்பினராகப் பணியாற்றி, தற்போது விலகுதல் செய்துகொண்ட

திரு. எம். ஆறுமுகம் அவர்களைப் பாராட்டி, அத்தொகுதி வாக்காளர்களால் வாழ்த்துத்தான் வாசித்தளித்தும், தேநீர் விருந்தும் அளிக்கப்பட்டது. தோழர்கள் வி. என். தத்தப்பன், முனுசாமி, கிருஷ்ணன், இராமசாமி ஆகியோர் பேசினர். (ச-கி)

நாட்டுப் பிரிவினை கோருகிறது நாடு

கழக ஆண்டு விழா

கொண்டாடினர் திராவிடர்

★

சென்னை 46-வது வட்டம்

17—9—55 மாலை 6 மணியளவில் கழகப் பணிமனை முன் நடைபெற்றது. தோழர் இளம்பரிதி, இரா. அகமழகன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

சென்னை 15-வது வட்டம்

23—9—55ல், விழா கொண்டாடப்பட்டது. தி. மு. கழகத்தின் கடந்த கால செயல்களையும், நாட்டுப் பிரிவினையின் அவசியத்தையும் விளக்கி ஆண்டு அறிக்கைகள் வெளியிடப்பட்டன. பின்னர், விழாக் கூட்டமும் நடைபெற்றது.

பம்பாய்—கொலாபா

22—9—55 இரவு 10 மணிக்கு, கூப்ரேஜ் திடலில், தோழர் ஏ. பி. இ. ஆறுமுகம் தலைமையில் விழாப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் கே. கே. இராமநாதன், எஸ். தங்கையா, மா. அண்ணாமலை, இரா.மா. சண்முகராசன், ச. தங்கவேலன், ஏ. எல். அன்பரசு, த. மு. பொற்கோ ஆகியோர் சொற்பொழிவாற்றினர். பின் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

சிறுகளப்பூர்

23—9—55 மாலை 6 மணிக்கு, கழகப் பணிமனையிலிருந்து ஊர்வலம் புறப்பட்டு, முக்கிய தெருக்களின் வழியாக வந்து சோழன் மைதானத்தை அடைந்தது. அங்கு தோழர் ம. தங்கையா தலைமையில் நடைபெற்ற விழாக் கூட்டத்தில், தோழர்கள் சி. கு. பிச்சை, ச. முத்துசாமி, அப்பா முத்துசாமி, சீனிவாசன், எம். எஸ். மணி ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

வெல்லோனி

17—9—55-ல், திராவிட நாடு பிரிவினை நாள் விழா, தி. மு. கழக 7-வது ஆண்டு விழா, வெல்லோனி 2-வது கிளைக் கழகச் சார்பில், அப்பர் டிவிஷனில் தோழர் ஏ. வெள்ளைச்சாமி தலைமையில் கொண்டாடப்பட்டது. தோழர்கள் அருணாசலம், கே. முத்துச்சாமி, எம். தோமஸ், கே. ஆர். குருசாமி, எம். கந்தன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

நெடும்பலம்

23—9—55 மாலை 6 மணிக்கு, நெடும்பலம் தி. மு. கழகச் சார்பில், செல்வம் தேநீர் நிலயத்திற்கு எதிரில், கழகக் கொடியை தோழர் க. வைத்திலிங்கம் ஏற்றி வைத்தார். சிறுவர், சிறுமியர்களுக்கு இனிப்புப் பண்டங்கள் வழங்கப்பட்டன.

பறங்கிப்பேட்டை

3—10—55 மாலை 6 மணிக்கு தோழர் எம். எம். முஸ்தபா தலைமையில் நடைபெற்றது. தோழர் டி. கே. சீனிவாசன் சொற்பொழிவாற்றினர்.

திருத்தங்கல்

25—9—55 இரவு 10 மணிக்கு, மறுமலர்ச்சி நாடக மன்றத்தாரால் தி. மு. க. ஏழாவது ஆண்டு விழாவையொட்டி, பாண்டியன் பூங்காவில், தோழர் கு. ஆ. சின்னக்கனி தலைமையில் 'தூக்கு மேடை' நாடகம் நடைபெற்றது.

அரிக்காரன்வலசு

23—9—55 இரவு 9 மணியளவில், தோழர் நல்லமுத்து தலைமையில் விழாக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் பலர் சொற்பொழிவாற்றினர்.

மேற்கு பாகிஸ்தான் ஒரே மாநிலமாவதற்கு எதிர்ப்பு!

கபார்கான் போராட்டம் நடத்துவார்

கராச்சி, அக். 6—

கடந்த வெள்ளியன்று பாகிஸ்தான் அரசியல் நிர்ணய சபை பெரும் அமளிக்கிடையே நிறைவேற்றிய, 'மேற்கு பாகிஸ்தானை ஒரே அங்கமாக உருவாக்கும்' திட்டத்தினை, சட்ட வரம்பிற்குட்பட்ட ஜனநாயக முறைகளில் எதிர்த்துப் போரிடுவது என்று ஒருறுப்புத் திட்ட எதிர்ப்புக் குழுவினர் முடிவு செய்திருக்கின்றனர் என்று தெரிகிறது.

இந்தக் கூட்டத்திற்கு, கான் அப்துல் கபார்கான் தலைமை தாங்கினார் என்றும் தெரிய வருகிறது.

"மிக அவசர அவசரமாக, இந்தத் திட்டம், பொறுக்குக் குழுவின் பரிசிலனைக்குக்கூட அனுப்பப்படாமல், ஜனநாயகக் கோட்பாடுகளுக்குப் புறம்பான முறையில், தொடர்புடைய மக்களின் அனுமதியின்றியே நிறைவேற்றப்பட்டிருக்கிறது,"

என்று, கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் கூறுகிறது.

தேசீய ஒழுக்கத் திட்டம்

புதுடில்லி, அக். 5—

இதுவரை பரிசோதனைக்காக மேற்கொள்ளப்பட்டு வந்த தேசிய ஒழுக்கத் திட்டம், டில்லி மாநிலத்திலும், இதர மாநிலங்களிலுமுள்ள சர்க்கார் உயர்நிலைப் பள்ளிகளுக்கும், உயர்தர இடைநிலைப் பள்ளிகளுக்கும் விரிவாக்கப்பட இருக்கிறது என்று தெரிய வருகிறது

இந்தத் திட்டப்படி, தேசியப் பெருமை, மதிப்பு இவை பற்றிய உணர்வை மாணவர்களுக்கு ஊட்டுவதற்காக உடற்பயிற்சி மட்டுமின்றி, 'கலாச்சார,' 'தார்மீக'த் துறைகளிலும் இதுவரை சுமார் 1,35,000 பேர்களுக்குப் பயிற்சி தரப்பட்டிருக்கிறதாம்.

மேற்கு பாகிஸ்தானிலிருந்து அகதிகளாக வந்த மாணவர்களுக்கும், கிழக்கு வங்கத்திலிருந்து வந்தவர்களுக்கும், இந்தப் பயிற்சி அளிப்பதற்காக முறையே ரூ. 2-இலட்சம் ரூ. ஒரு இலட்சம் மானியம் வழங்கப்பட்டிருக்கிறதாம்.

இந்தத் திட்டம் இப்போது காஷ்மீருக்கும், இந்தியாவின் இதர பகுதிகளுக்கும் விரிவாக்கப்படவிருக்கிறது.

மத்திய அரசாங்கம் இந்த திட்டத்தை ஏற்றுக் கொண்டு விட்டது என்றும்; 'சி' பிரிவு மாநிலங்களுக்கெல்லாம் இதுபற்றி சுற்றறிக்கை அனுப்பப்பட்டிருக்கிறது என்றும் தெரியவருகிறது.

தேசீயப் புத்தக டிரஸ்ட் நிறுவப்படும்

இந்திய சர்க்கார் முடிவுபற்றி கல்வி மந்திரி

புதுடில்லி, அக். 6—

மக்களுக்கான நல்ல புத்தகங்கள் தயாரித்து வெளியிடுவதற்கென இந்திய சர்க்கார் ஒரு புத்தக 'டிரஸ்ட்' நிறுவ முடிவு செய்திருப்பதாகக் கல்வி மந்திரி மௌலானா ஆசாத் கூட்டம் ஒன்றில் பேசுகையில் தெரிவித்திருக்கிறார்.

ஆசியாவில் பொது வாசக சாலைகளை அபிவிருத்தி செய்வது பற்றிய ஐ. நா. கல்வி - சமூக - கலாச்சார நிறுவனம் ஏற்பாடு செய்துள்ள விவாத அரங்கினைத் துவக்கி வைத்துப் பேசுகையில் அவர் அந்தத் தகவலைத் தந்திருக்கிறார்.

'முக்கியமான எல்லாப் பொருள்கள் குறித்தும் 'தர'மான புத்தகங்களும், இலக்கியங்களும் வெளியிடுவதுடன், பல இந்திய மொழிகளிலும், கீழ் - மேல் நாடுகளின் சிறந்த ஆசிரியர்களது நூல்களும் மொழி பெயர்க்கப்படும். பல பல்கலைக் கழகங்களும் இம்மாதிரி வெளியீடுகளைக் கொண்டு வருவதற்கு, 'டிரஸ்ட்' உதவும் என்றும் ஆசாத் தெரிவித்திருக்கிறார்.

'உரிமை மட்டுமல்ல—கடமையுமாகும்'

"பாதுகாப்புப் படைகளை வலுப்படுத்துவதற்கு அரபு நாடுகள் உறுதி கொண்டு விட்டன; அதைப்பற்றி எவரும், இனி, அநாவசியமாகப் பேசத் தேவையில்லை; 'சுய பாதுகாப்பு' என்று 'உரிமை'மாத்திரமல்ல-'கடமை'யுமாகும்,"

என்று, ஐ. நா. பொதுச்சபை கூட்டத்தில், சிரியா பிரதிநிதி கூறியுள்ளார்.

'அரபு நாடுகளின் தாக்கும் சக்தியை, ஆயுதம் கொடுத்துப் பலப்படுத்தவேண்டாம்,' என்று, இஸ்ரேல் பிரதிநிதி கூறியதைத் தொடர்ந்து, சிரியா பிரதிநிதி பேசுகையில், "ஆயுதத் தளவாடத் துறையில், அரபு நாடுகள், 'இல்லாமை' நிலையில் இருக்கின்றன," என்று குறிப்பிட்டார்.

தி. மு. க. பொதுச்செயலாளர் நெடுஞ்செழியன் திருப்பத்தூர் வருகை

9—10—55 மாலை 6 மணிக்கு, திருப்பத்தூரில், பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்கு, திருப்பத்தூர் தி. மு. கழகச் சார்பில் வரவேற்பு அளிக்கப்படும். அது போது, மாநில மாநாட்டுக்கு நிதி அளிக்கப்படும். தோழர் முல்லை சத்தி, மற்றும் பலர் பேசுவர்.

அன்று மாலை 5 மணிக்கு, திருப்பத்தூர் நகர சபையில் பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்கு வரவேற்பு அளிக்கப்படும்.

கழகக் கூட்டம்

★

சென்னை (ஆள்வார்பேட்டை)

46-வது வட்ட தி. மு. கழக ஆண்டு விழா

பீமன்னன்பேட்டை அருகிலுள்ள திடலில்

9—10—55 மாலை 6 மணிக்கு

தலைவர் : எஸ். எஸ். பி. லிங்கம்

பேசுபவர் : சி. பி. சிற்றரசு

'மக்களும்-ஆட்சியும்' என்பது பற்றி தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள், சென்னை-கோகலே மண்டபத்தில் நிகழ்த்திய சொற்பொழிவும் ஒலிபரப்பப்படும்.

சட்டசபைமுன் தடியடிப்பிரயோகம்

எதிர்க்கட்சியினர் ஒத்திவைப்புப் பிரரேபணை

திருவனந்தபுரம், அக். 6—

"நேற்று திரு-கொச்சி சட்டசபை முன் அமைதியான முறையில் ஆர்ப்பாட்டம் நடத்தியவர்கள் மீது மிருகத்தனமாகப் போலீசார் தடியடிப் பிரயோகம் செய்து சுமார் 153 பேர்களுக்குப் படுகாயம் விளைவித்தது, மக்களிடையே பீதியையும், கலவரத்தையும் உண்டு பண்ணியிருப்பதால், அது குறித்து சட்டசபையில் விவாதிக்கவேண்டும்," என்ற ஒத்திவைப்புப் பிரரேபணை ஒன்று எதிர்க்கட்சித் தலைவரான டி. வி. தாமஸ் என்பவரால் கொண்டுவரப்பட்டது.

உள்நாட்டு மந்திரியான ஏ. ஜே ஜான், 'சம்பவத்தை ஒட்டி சிலர் மீது வழக்குத் தொடரப்பட்டிருப்பதால் அது குறித்து விவாதிக்கக் கூடாது,' என்று கூறினார்.

ம. சோ. கட்சியைச் சேர்ந்த தோழர் நடராச பிள்ளை, 'தடியடிப் பிரயோகம் குறித்து போலீசார் வழக்குப் பதிவு செய்திருக்க முடியாது; அதுபற்றி மட்டும் தான் விவாதிக்க வேண்டுமென்கிறோம்,' என்று தெரிவித்தார்.

இப்படியாக சில விவாதங்களுக்குப் பின், பிரரேபணை சபைத் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

'யாத்திரீகர்'களுக்கு வசதி

2-ம் திட்டத்தில் ரூ. 3.5 கோடி ஒதுக்கப்படுகிறது

புதுடில்லி, அக் 6—

திட்டக் குழுவின் யோசனையுடன் இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில், 'யாத்திரீகர்' வசதிக்கென ரூ. 3.5 கோடி செலவிட முடிவு செய்யப்பட்டிருக்கிறதாகத் தெரிகிறது.

1954-ம் ஆண்டில், 'யாத்திரீகர்'கள் வருகையின் காரணமாக, அயல் நாட்டுச் செலாவணி வசதி ரூ. 5 கோடி வரை கிடைத்ததாம்.

'யாத்திரீகர்' வசதி அபிவிருத்தித் திட்டப்படி ரூ. 11 இலட்சம் செலவில் ஓட்டல் பயிற்சிப் பள்ளி அமைக்கவும் ஒரு கோடி செலவில் விளம்பரம் செய்யவும் திட்டமிடப்பட்டிருக்கிறதாம்.

தங்கும் விடுதிகள் பல அமைக்கப்படுமாம்.

துவக்கத்தில் போக்குவரத்து இலாகா இதற்கென ரூ. 8.57 கோடி செலவிட உத்தேசித்திருந்தது.

காஷ்மீர் சிக்கல்

புதிய கவர்னர்-ஜெனரல் நம்பிக்கை

கராச்சி, அக். 6—

பாகிஸ்தானின் கவர்னர்-ஜெனரலாக மேஜர்-ஜெனரல் இஸ்கந்தர் மிர்ஜா இன்று பதவிப் பிரமாணம் எடுத்துக் கொண்டார்.

கடந்த திங்களில் உடல்நலக் குறைவுகாரணமாக ஓய்வு எடுத்துக் குலாம் முகம்மதுவுக்குப் பதிலாக அவர் ஏற்கனவே, தற்காலிகமாக அப்பதவியிலிருந்து வருவது அறிந்ததே.

பதவி ஏற்றதும் அவர் வானொலியில் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"நமக்கு இந்தியாவின் நட்புறவு தேவை; ஆனால், இந்தியா—பாகிஸ்தான் இரண்டிடையேயும் ஒரு நல்ல நட்புறவுச் சூழ்நிலைநிலவ முடியாதிருப்பதற்குக் காஷ்மீர் சிக்கல்தான் காரணம்;

"காஷ்மீர், இந்தியா அல்லது பாகிஸ்தானுடைய சிக்கல் மட்டுமல்ல; சுய நிர்ணய உரிமையை நிலைநாட்டிக் கொள்வது பற்றிய விடுதலை விரும்பிகளின் உரிமைகளை உள்ளடக்கிய நீதி, சமாதானம் இவற்றிற்குரிய ஒரு சிக்கலாகும்;

"இந்தியா—பாகிஸ்தான் பிரதமர்கள் அடுத்துச் சந்திக்கும்போது, இந்தச் சிக்கலுக்கு ஒரு நல்ல முடிவு காணுவர் என்று நான் நம்புகிறேன்."

மலம்புழா அணைக்கட்டு

பாலகோடு, அக். 4—

ரூ. 3.8 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள மலம்புழா அணைக்கட்டை முதன் மந்திரி காமராசர் வரும் அக்டோபர் 9-ந் தேதி திறந்துவைப்பார் என்று தெரிய வருகிறது.

கோவா விடுதலை இயக்கத்தவரை கொடுமைக்கு ஆளாக்குகின்றனர்!

போர்ச்சுகீசியரின் போக்கைக் கண்டிக்க 15 பெண்மணிகள் உண்ணாவிரதம்

பூனா, அக். 6—

கோவா எல்லைக்குள் விடுதலை இயக்கத்தில் பங்கு பெறுவோர் மீது கொடூர அடக்குமுறைகளை போர்ச்சுகீசியர் ஏவிவருவதாகக் கூறப்படுகிறது.

கோவா 'சத்தியாக்கிரகம்' இந்திய சர்க்காரால் தடுக்கபட்டுவிட்டதால், கோவா எல்லையைப் பாதுகாக்க வேண்டிய அவசியம் போர்ச்சுகீசிய இராணுவத்தினருக்கு இல்லாது போய் விடுவதால், அவர்களுக்கு, கோவாவிற்குள் விடுதலை இயக்கம் நடத்துவோரைக் கொடுமைப்படுத்தும் 'பணி' தரப்படுகிறதாம்.

பல கோவா தேசியக் காங்கிரஸ் தோழர்கள் திரும்பவும் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்படுகின்றனராம்.

சிறை வைக்கப்பட்டிருக்கும் 'சத்தியாக்கிரகி'களை அடித்துத் துன்புறுத்துகின்றனராம்!

விடுதலை இயக்கத்தைச் சேர்ந்த மூன்று தோழர்களின் தந்தைகளைச் சிறைப்பிடித்து வைத்துக் கொண்டு, அந்தத் தோழர்களைச் சரணாகதி அடையச் செய்யுமாறு போலீசார் வற்புறுத்துகின்றனராம்.

சிறைக்குள் தங்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளைக் கண்டிப்பதற்காக, 15 பெண் 'சத்தியாக்கிரகி'கள் உண்ணாவிரதம் துவங்கியிருக்கின்றனர் என்றும் தெரிய வருகிறது.

ஒரிசா மந்திரிகள் மீதும் நம்பிக்கையில்லா தீர்மானம்

புவனேஸ்வரம், அக். 6—

ஒரிசா மராமத்து இலாகா மந்திரி மீதும், நிவாரண இலாகா மந்திரி மீதும் முறையே, பொறுப்பை அலட்சியம் செய்தல்—வெள்ள நிவாரணத்தில் பாரபட்சம் காட்டுதல் போன்ற குற்றச்சாட்டுகளுக்காக அவர்கள் மீது நம்பிக்கை இல்லை என்று தெரிவித்து இரண்டு தீர்மானங்களை, ஒரிசா சட்ட சபை எதிர்க்கட்சித் தலைவரான ஹரதாகர் சுபாகர் கொண்டுவந்திருக்கிறார் எனத் தெரிகிறது.

கனரக மின்சார இயந்திர தொழிற்சாலை

பிரிட்டிஷ் நிறுவனத்துடன் பேச்சு

புதுடில்லி, அக். 5—

இந்தியாவில் கனரக மின்சார இயந்திரத் தொழிற்சாலை ஏற்படுத்துவது பற்றி பிரிட்டிஷ் நிறுவனம் ஒன்றுடன் இந்திய சர்க்கார் பேச்சு நடத்த முடிவு செய்திருக்கின்றனர் என்று தெரிகிறது.

பூர்த்தியாவதற்கு 4 ஆண்டுகள் தேவைப்படும் திட்டத்திற்கு துவக்கத்தில் ரூ. 25 கோடி செலவாகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது; ஆனால், 'பிரிட்டிஷ் அசோசியேடட் மின்சாரத் தொழில் நிறுவனம்' என்ற அந்த நிறுவனத்தாருடன் 15 ஆண்டுகளுக்கு ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டுமாம்

அந்த நிறுவனத்தைச் சேர்ந்த குழுவினர் ஏற்கனவே டில்லிக்கு வந்துள்ளனராம்.

தென் வியட்நாமில் வாக்கெடுப்பு!

பாரிஸ் அக் 6—

'தென் வியட்நாம் அரசாங்கத் தலைவர் பதவியிலிருந்து பாவோடாயை நீக்கிவிட வேண்டுமா—வேண்டாமா' என்பதைக் குறித்து மக்களின் தீர்ப்பைத் தெரிந்து கொள்ளும் பொருட்டு, நாடு முழுதும் வரும் அக்டோபர் 23-ந் தேதி முதல் டிசம்பர் 1-ந் தேதி வரை ஒரு வாக்கெடுப்பு நடைபெறும் என்று தெரிகிறது. இந்தத் தகவலை பிரெஞ்சு உள்நாட்டு மந்திரி வெளியிட்டிருக்கிறார்.

காஷ்மீர் எல்லையில் 103 பேர் பலி!

'நிலக் கண்ணி'கள் வெடித்ததின் விளைவு

ஸ்ரீநகர், அக். 6—

ஜம்மு—காஷ்மீர் எல்லையில் 'போர் நிறுத்தக் கோடு' நெடுகிலும் வைக்கப்பட்டிருந்த நிலக் கண்ணிகள் திடீரென வெடித்ததின் விளைவாக 103 பேர் கொல்லப்பட்டனர் என்றும், 300 கால்நடைகள் மாண்டனவென்றும் காஷ்மீர் சட்டசபையில் உதவி உள்நாட்டு மந்திரி டி. பி. தார் தெரிவித்தார்.

போர் நிறுத்தக் கோடு காஷ்மீர் பாகிஸ்தான் எல்லை நெடுகிலும், சண்டையின்போது, அந்தக் கண்ணிகள் வைக்கப்பட்டவை என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

சம்பத் சொற்பொழிவு

9—10—55 மாலை $5\frac{1}{2}$ மணிக்கு, சென்னை 1-வது வட்ட தி. மு. கழகச் சார்பில், சென்னை, எண். 217, திருவொற்றியூர் பெரிய சாலையில், தோழர் எஸ் எஸ் தென்னரசு தலைமையில், தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள், சென்னை கோகலே மண்டபத்தில் நிகழ்த்திய சொற்பொழிவு ஒலிபரப்பப்படும். தோழர் கண்ணதாசன் கலந்து கொள்வார்.

சென்னை 23-வது வட்ட தி. மு. கழகச் செயற் குழு உறுப்பினர்கட்கு

9—10—55 காலை 10 மணிக்கு, சென்னை 23-வது வட்ட தி. மு. கழகச் செயற் குழுக் கூட்டம், சின்னபாபு தெருவிலுள்ள கழக அறையில் நடைபெறும்.

திருக்குறள் வகுப்பு

8—10—55 பிற்பகல் 2-30 மணிக்கு, சென்னை-பெத்துநாய்க்கன்பேட்டை, எண் 15, முத்து கிருஷ்ணன் தெருவில் நடைபெறும். 'வலியறிதல்' என்பது குறித்து, திரு. மயிலை சிவமுத்து, திருமதி ஆர். சுந்தராம்பாள் ஆகியோர் பேசுவர்.

நகர இளைஞர் கழகம்

8—10—55 மாலை $6\frac{1}{2}$ மணிக்கு, சென்னை-சூளை, எண் 10 மாணிக்கச் செட்டித் தெருவில், திரு. எம். சி. கண்ணபிரான் தலைமையில், திரு சு. அமிர்தலிங்கனார், 'தமிழர் நாகரீகம்' என்னும் பொருள் பற்றி பேசுவார்.

முத்தமிழ் விழா

9—10—55 காலை 9 மணிக்கு, கோவை தியேட்டர் ராயலில், தமிழ் இளைஞர் மன்றச் சார்பில், திரு. நா. சுந்தரராசனார் தலைமையில் நடைபெறும். திருவாளர்கள் மருதவாணனார், இளங்கோ ஆகியோர் பேசுவர். தோழர் நாகூர் அனீபா குழுவினரின் இசை நிகழ்ச்சியும் நடைபெறும்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர். இரா. நெடுஞ்செழியன். எம் ஏ.